791

பிஸ்மில்லாகிற் றகுமானிற்றகிம்.

இஃது

# முகியித்தீனாண்டவர்கள் பேரில் பாடிய
# மௌனசிகாமணிப் பதிகம்.

திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த வீரவ
நல்லூர் காதிர் முகைத்தீன் இராவுத்தரவர்கள்,
பாடியது.

அம்பாசமுத்திரம் லெக்ஷ்மி விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது,

1920

Q7:31
N20
170754

விலை அணா 1

இஃது

சேவல்மாநகரம் **M. A.** நெயினுமுகம்மது பாவலரவர்கள்

இயற்றியது.

## சிறப்புப்பாயிரம்.

### சாற்றுக்கவி

### நேரிசை ஆசிரியப்பா

வண்டுகண் படுத்த குண்டுநீர் தாமரைப்
பொன்முறுக் கள்ளிதழ் கண்டுசோ ளாப்து
ராகங் கொளித்தொளிர் வாகமர் தடாகமும
காவுந் தாரம்பி பருணியும் பொன்னடி
மின்னடி பயிலுங் கன்னடி யன்காலும்
பொர்க்குலை சாய்க்கும் செனர்க்குலை குடாவடி
மருதவேலியும் இருநிலம் சிறக்கும்
சீவ ரோங்கும் வீரவ நல்லூர்
வாசன் வதனப்பர காசன் இபுராகிம்
மூகியத்தியின் இராவுத்தர்முதிர் தவத்துதித்த
மாதிரு மைந்தன் காதிரு முகியித்தீன்
உலக முனற்றிய வோமொளித் திருமணி
ஜெக சர்க்குரு ஜமேனுதைப பூபதி
எம்பிரான் முகியித் தினெனுந் தம்பிரான்
பூங்கழ லோதும் மௌன சிகாமணிப்
பதிகந் தன்னைப் பாடினன் அஃதில்
மதுர பாகத் தீந்தமிழ் வாக்கியம்
முக்கனி இரச முதிர்ந்து
மிக்கொடு மெவற்றும் மிளை சொலற் கில்லே

இலாகி

பிஸ்மில்லாகிர்ராகுமானிற்றகீம்

# மௌன சிகாமணிப் பதிகம்.

## காப்பு

ஆதியே யெந்தவஸ்து மமைத்தன னோவயுந்தன்
சாதக கருணைமௌன சிகாமணிப் பதிகந்தனனை
யோதவே சமதாயெ[illegible] மோங்கிய சோதியப்துல்
காதிரை அன்பாய்க்கொண்ட ஹக்கனை காப்புநீயே

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

திருவுருவான கத்தனனியரு ளொளி விலேகி
செகமெலாஞ் சமதாய் மிக்க
மருவுருவின்றியேக மயமென விளங்கு சோதி
[illegible]மணி யப்துல் காதிர்
தருபொரு ளனைமென்வி மாமணிபாக்கியாதன்
தவத்திலெல் வாய்கனியே
பரிவுரு மிக்கஞானம் புகர்தரும் பெங்கள்மௌன
சிகாமணி [illegible]கியித் தீனே (2)

அடக்கமுண் ணெஞ்சத் துணர்வது நன்கென
வான்[illegible]வர் சாலவே பூதலத்து

துடக்கிய வின்மொணி நினைத்தனை யுணரூத்
தீமையான் மாகொடு மூடரென்ன
படைக்கரு நாமம் வடுத்தேனினியென்ன
பயனோ வறிகிலேன் குணக்சடலே
திடப்படுங் கருணை வள்ளலே மௌன
சிகாமணி முகியித் தீனே (3)

பொல்லாத பாதகப் பரத்தையர்மீ தாசையுற்றுப்
புணர்ந்தே கலவிதனி லாழ்ந்திநிலை
நில்லாத பாயப்புன் சரீரம் நிலையென்று
சந்ததமே நம்பிநிதியுந் தேற்றி
வல்லான ருக்கொண்ட ஞானகலை யாவும்
மறந்தே யகிலமிசை யறிவழிந்து
கல்லாத பெருமூட னாகினேன் திருமௌன
சிகாமணி முகியித் தீனே (4)

பஞ்சிற் படுகனப் பொரியது நீத்தும்
பாவியே னிடர்பட் பரிந்துமிக்க
நெஞ்சிற் பன்பவ வினையடர்ந் திடவுமோர்
நினைவின்றி மருட்டு பொல்லா
வஞ்ச நிபுலிசை யமர்த்தும் வாய்மையும்
வறியா துழல்கின்ற தமியேன்
னெஞ்சத் துணர்வது நன்குன் நாதனேமௌன
சிகாமணி முகையித் தீனே (5)

நன்மைக் கடைகண்ட நாயேன் சிந்தையின்
நாளுங் கவலைவந் தணிகிடாமன்
வன்பும் கருணையும் வைத்தே தயவுசெய்
தாளுவீர் இந்த வையமிசை
பொன்னுல காம்பையர் தேவர் முதல்சிறு
விலங்கு விரைமுன் விரும்பிவேண்டும்
மன்னவ ரகமதின் பேரரே! மௌன
சிகாமணி முகியித் தீனே (6)

தடங்கொண்ட வாற்றி விடைகண்ட சொன்போற்
றமியேன் அதுதினம் உமதுதிரு
விடங்கண்டு பொற்று யுரைப்பாதம் புகழ்ந்து
முற்றியும் சால விரகந்தீர்த்தால்
திடங்கொண்டு விருதயம் பூரித்து பொன்னனைய
வெனதுதிரு மேனி யெல்லாம்
கடங்கொண்டு மகிழ்வெய்தும் காதிரே! மௌன
சிகாமணி முகையித் தீனே (7)

அற்ப ரிடத்தி னுறவாடி யணையறிவு
மகன்று தெய்வமே உந்தனிரு
பொற்பதந் தினையேனும் நினையாது மறந்து
புகழொடு கீர்த்திகண் ணற்ற
கற்றனை ததிமென்ன நிந்தைமிசை வெண்ணியே
காலமது தள்ளினேன் னையோவினி

பொற்பதிக் கடைவனோ நாதனே! மௌன
சிகாமணி முகையித் தீனே (8)

பொய்ப்படு வாவிபோன் றினைத்தனை பொறையிலா
யூன்பொதி யாக்கை சதமிதென்ன
யுய்ப்படு மூடமாந்தர்தம் கொள்கை
யூர்ந்தே கர்த்தனை மிகுமறந்தேன்
மையப்படு கூந்தன் மடமயிர் பாத்தீமோ
மகமே! மாசின் மாமணியே!
கைப்படு வானவர் தேற்றும்காதிரே! மௌன
சிகாமணி முகையித் தீனே (9)

துடிகொண்ட மதகரித் திறல்கண்டு வெருண்டு
திறைவிண்டு தகைந்த களிஞர்போன்
தடங்கொண்ட கடற் றுறைவாயி னின்று
தயங்கியும் நீந்தாது பின்னிடைந்த
திடங்கண்ட பேடிபோன் நாயேன் மிக்க
திகை திகைத்து நலிந்தும் ஞானக்
கடல்கண்டு களித்த துண்டோ? மௌன
சிகாமணி முகையித் தீனே (10)

பொல்லாத சேயர்கள் வாழுமிப் புன்னுலகை
மெய்யென்று நம்பி மதியகன்று

கல்லாத தெல்லாம் கற்றே யறிவழிந்து
கர்த்தனபி போதகந் தனையிகழ்ந்து
பல்லாயிரங் கோடி பொய்புலை சந்ததம்
பகர்ந்தா லிதுபெரும் பாக்கியமோ?
நல்லார் நபி திருப் பெயரமே மௌன
சிகாமணி முகையித் தீனே (11)

குறுந்தொழி லியற்றுந் திருவிலா யினக்
குரங்கனை வன்கொடு பாவிகட்கும்
அரும்பொருள் வேசி யாசையான் மெலிந்து
வருந்து மன்பிலா யினர்கட்கும்
பெருந்தரை மீதே உமதருளுதவி
பெறுகா திடர்பட வருளும்
தெருண்மிகு மோக்ஷக் கதிதரும் மௌன
சிகாமணி முகையித் தீனே (12)

வரிசை மிக்குள நன்னபி மார்க்குயர்
வேத வாய்மைக ளெல்லாமுந்த
நெறிசேர் திருவொலி மார்க ளருள்செய
தீங்குலம் நெறியான் வருமுறைபோல்
வறிவொடு ஞானமும் புகழும் நன்மையும்
நீடிய வளர்தர அருள்வீர்
பொருள்தரு ஞான வருள்புரி மௌன
சிகாமணி முகையித் தீனே

வேத்த தடங்குன் றிருப்பொரு ளெல்லாம்
விரும்பியே யகத்து ளுணர்வுபெற்ற
நீதத் தருங்குண சாலிக்ட்க் கினிது
நிகழ்த்தியு மன்பொடு கருணைநல்கும்
போதத் தரும்பொருள் பரித்தேய ருந்திய
புன்மைசேர் மாமணி யென்னும் நல்ல
காதத் திருமணங் கமழுங் காதிரே மௌன
சிகாமணி முகையித்தீனே. (14)

பஞ்சகத் தழல்போ றமியே னெஞ்சம்
பற்றிய பவமெனுங் கொடுவினையால்.
நெஞ்சத் துபரமாகியே யனுதின
உந்தனை நினைந்து நினைந்துருகி
தஞ்சமே யுமது கதியென வடைந்தேன்
தற்காத் தருளுறு குருபரமே
மின்சுனர் புகழ்தருந் துரையே மௌன
சிகாமணி முகையித்தீனே. (15)

அலகின் மிக்கநன் னெறிதரு மான்றவர்
அகமகிழா தனித்திய மவர்க்கருளி
குலவுன் துர்க்குண மூடனாய் யலகின்
குவைவுறு மியற்கை கொண்டேனின்ப
கலையின் திருவரு ளோதியே சந்தமும்
கனிவுக ளுற்ற திருக்கனியே

மலிபுகழுப்துல் காதிரே மௌன
சிகாமணி முகையித்தீனே. (16)

ஈரே முலகுந் தனதாய வல்ல
வேகனது திருவருட் குறியவின்ப
மாறுப தொண்டர் சிந்தையி னிலக்கனா
மதுரமது மாறாது சந்ததமே,
தாராள மாயுணங்க வருளாத தினுமென்ன
தாமதமோ தொண்டர் நாதா
காராரும் பெங்கட்க் கருணையே மௌன
சிகாமணி முகையித்தீனே. (17)

மைக்குழன் மாதர் மேன்மைய லாகியும்
மயக்கத்து வாயதுன் காமபித்த
னக்கென ஞானி என்னவேமிக்க
ஞாலத்து ளார்ந்த மடையர்தமின்
பொக்கதையோரும் மாந்தர்கட்கென்ன
புத்துமோ கூறும் மன்னே
தக்கபுகழ் பெற்றகுரு நாதனே மௌன
சிகாமணி முகையித்தீனே. (18)

கஞ்சா வபினி சாறுயமொடு மதுவருந்தி
வெறிகொண்டு மயக்கத் தடைந்தபெரு
துஞ்சா னுணர்வற்ற பாவியொடு மிக்க
வஞ்சனை சூனியங் கொடியவே வன்மூதி

லஞ்சாது புரிய முயல்கின்ற நீசரிவ
ரகத்திடை கொடுநோ யுணங்கி
டஞ்சாய்த் துவள வருட்செய்யும் மௌன
சிகாமணி முகையத்தீனே (19)

கடுமண விடைநின் றூடும் வல்லவர்
கைப்பம் பரந்தெனதுகன்வி
கொடும்புலி தன்னி லினியவர் சபைமுன்
குறையது தருகா தினியநில்ல
யடைதர விதியே யநுதின மருள்செய்
வருபுக ழிறைவ னருமறைகூர்
கொடையருளின்ப நடைபெறு மௌன
சிகாமணிமுகையித்தீனே. (20)

மூட மதியனை பொக்குவிற்களைந்து
மூவுலகுந திருந் தீன், யிர்க்ன்
நீடிவளர்ந்து சாலவு மோங்கி
நிறைதனை, யடைய வைக்குமுனமென்
நாடிய பரமகதி தனிலடைய
நாதனே பெருநலம் வைப்பாய்
கூடிய வின்ப சுகந்தரு மௌன
சிகாமணி முகையித்தீனே (21)

பூதத்தடைந்த நாகவாய் மின்றும்
பொற்புற்றாய முத்தென்னவே வார்
காதத் திலங்கும் தீபச்சுடரைக்
கண்டே வியந்த தன்மையது

தாதுற்றசெவ்வித் தாமரை யிதழென்னத்
தகைந்தே வண்டினஞ் சித்திரத்தும்
மோதுற்ற வாவிய கொள்கையே மௌன
சிகாமணி மூகையித்தினை (22)

அருமணி யாந்திரு வுமதபு சாலிதென்
நகுமத ரிணையடி மிகுதொழுத
பெரும்புகன் பாவி உலகெலாம் கீர்த்து
பெருகியே சீமதாய் நிறைந்தே வோங்கி
தருங்கொடை நன்மையும் தூயோன் புகழ்ச்சியும்
தாணியிற் றனவர் மிகுசிறபப
வரும்பொறை மாற்றும் ஜாகிலேன் மௌன்
சிகாமணி மூகியித் தினை (23)

ஆவலவர்க் கன்ன லகத்துறுந் தேன்போ
லனுதினந் தமியேன யமீதூர்ந்தும்
ஞாலவாய் மாமக்க ளென்னவே சால
வாவியும் மெந்தன் மதியகன்று
சாலவே கொண்ட துயரினி நானென்ன
சாற்றுவேன் தேவ தேவே,

யோலமிடு ஞானகலை யோதியுணர் செய்கை மௌன
சிகாமணி முகியித் தீனே (24)

குற்றமொன் றில்லாக் குலமனுந் தீனின்
குலவியே சார்ந்தபோக் குபிற்கடன்னை
சுற்றமுந் துணையும் போன்மிகு கூடி
சுகமெனு மின்ப சாகரத்தின்
நிற்றமு மூழ்கி நாளுமே வாண்கும்
நீதிசேர் ஸன்னய வான்களின்ப
முற்றியுட் புகுதா திடாரு மௌன
சிகாமணி முகியித் தீனே (25)

வருடக்குடி கொண்ட சிந்தையினா லன்பு
விளைளிக்குமே சால வாதலினால்
தெருட்கலை மாமறை யெனுந் திரு ஞானத்
திருவருட் பொருள்கூர் சற்குருவின்
பெருட்புகண் மாபத சேவடிக் கென்றும்
பேணியே யனுதினம் தொண்டுசெய்தும்
திருக்கலை யோகியே யருட்குண முற்றன மௌன
சிகாமணி முகையித் தீனே (26)

எச்சாண் சடில் யவபவப் பொருந்த
விசைந்த சூல் திரக் கூடினிறை

பொச்சாப் புடலி னூறிய வழுக்குமாம்
போலவேத்திமே னணிந்தே கெட்ட
கொச்சைக் கிளப வாசனைப் பொருள்களின்
குறைவுண ரும லறிவகற்ற
இச்சைக் குணமென்ன நன்மையோ மௌன
சிகாமணி முகியித் தீனே (27)

பேசுமுன் கன்மங்க ளடைய வைக்கும்
பேயனிபு லிசென்ற ஜாகில்தன்னை
பாசமொடு புகழ்ந்து பேசியபொற் பாவிகளும்
பாணரகி லாழ்கவே ச்ாலதுவா
லீசனன ாசரொனும் வாசமுறு தேசிகனை
யின்பகலை பண்பினுயர் கோனே தேனே
தேசுபுகன் கொண்டபகு தாதுகுமென் தினேமௌன
சிகாமணி முகையித் தீனே (28)

மறையினுந் திருக்கலை யருண்சீர் மொழியவை
யுணர்மா விலவொலி யார்கள்
உறைதரு மறிவினன் யருண்மொழி யனுதின
மூணரா தவறின மோக்ஷக்
சுறைதவழ் வதற்குன தின்புறு கருணையாங்
கிருபைகண் காகமேலா வியற்றாய்
புறைபரு புகண்தரு பொன்னை மெலன

சிகாமணி முகையத் தீனே (29
நிரைதிருக் கருணையா முமதுநற் கிருபை

நில்பதி நாளுமே யடியவர்கள்
குறைசெய வேண்டினற் குணமொடு மனதைிட

நினைவது கொண்டே னினியெங்குற்றம்
தரைதனில் லேகியு மிடர்துயர் முதலிவை

எவுமகல் தரவருள் செய்கும்
நரைதிகழ் கங்கை வரைபுகழ் மெளன

சிகாமணி முகையித் தீனே (30)

அற்புத மியற்றியு குவலய வரைக்கு

ணுகிய நீதம தாக்கும்
கற்கலை மாமறை யோதிய மூற்புகன்

நவின்றிடு பொற்பத ரான
கற்தனு நீவி ரற்புத மௌன

மூறிய நற்குணக் கடலே
சற்குருவே வேஜய விற்பனரே மௌன

சிகாமணி முகியித் தீனே (31)
நந்தனி லோங்கிய சீரும் செல்வமும்

சதமென்றேநாளும் நிலையடைந்த
சிந்தையை யென்றும் நிந்தைசெய் தகற்றும்

சீறிய சற்குணவான் றவர்தம்
புந்தியிற்க் கென்ன குறைவினி யருள்வேன்

புறையருமாமறைப் பொன்னே

சுந்தரஞ் சேர்திரு மணியே யென்ன
சிகாமணியே முகியித்தீனே. (32)

வன்னவ னருளா னன்னய மடைந்தே
வாழுநன் னிதர்க ளின்பமுத்தி
துன்னலும் மன்பின் வாய்திருத் தொண்டர்
துணையென நண்ணிய நேயமிதை
நன்னய மெனவுறை செய்திரு நாவும்
நவின்றுமே வாசம் நாயகமே
கன்னலி னினிய காதலறே மென்ன
சிகாமணி முகியித் தீனே (33)

நற்றவை கேட்பத் தீயவை வளங்கி
நவில்தரு மொழியுங் குணமேயன்றி
உற்றவர்க் கருளுந் திருவிலரான
உறவினர் செய்கை நாளுமுணர்
செற்றதுன் னிந்தை யற்றவ ரன்பிற்ச்
சிறந்தவருகியே மோச்சமுத்தி
பெற்றவர் நாளும் வாண்குவர் மென்ன
சிகாமணி முகியித்தீனே. (34)

மைய்யிருளகற்றும் மின்னது போலவே
தமியே னெனது மனங்குளிர
வைய்யமி னுமது திருமுக வொழிவாம்
வடிவதை யணுவே தோன்றவருள்

யைய்யனே தெருண்மிகும் சர்க்குண நிதியே
யிளமொளிர் மாமதி வொளிவே
துய்யனர்ப் பகுதா தருள்திரு மௌன
சிகாமணி முகியித்தீனே. (35)

மன்னனைக் காய்ந்து மருவனை மணந்த
மாகொடு நீவியாம் தோஷிகட்கும்
பொன்னனை இறைவன் றிருவருள் வேதம்
பொய்யெனும் வினவிய மூடர்கட்கும்
தன்னருள்செய்தே முத்தியி லேற்றுந்
தரமென நன்மையேய வன்னரகம்
துன்னவே நாளும் வருள்செயும் மௌன
சிகாமணி முகிய்யித்தீனே. (36)

உட்ப்புல னறிவா ளுறைதருஞானப்
பொருளதேச உண்மை பெற்ற
நட்க்குண வான்றோ ரினமென கண்ணி
நாயேன் பன்கலை தேர்ந்தேயுள்ளத்
துட்பெரு மகிழ்வு சிறந்தேன் வெந்த
னுயிர்த்துணை நிதியே யருளே பொன்னே
மட்ப்பெரு காட்ஷி வருள்தரு மௌன
சிகாமணி முகிய்யித் தீனே. (37)

குன்றெனச் சிறந்த வன்பெருந் தேவைக்
கூசாவி னடைத்தேத நினின் மார்க்கம்

மன்பெருங்கொடிய குபிர்க்குலமனையும்
வரவருள் செய்திர் தேசிவமூர்த்
நன்குறு நூர்க்கடம் லுகர்திரு நெஞ்ச
நாயகா தெருண் மிகுந்த
பொன்பெருமேனி யொளிர்திரு மௌன
சிகாமணி முகையித் தீனே (33

அற்றமரு சர்வவொலி மார்களவர் தலைசாய்க்கும்
அற்புதமெஞ் ஞானவரு ளொளியே
பற்றியொடு நிற்றிசையு முமதுபுங் கழலோதும்
மௌன சிகாமணிப் பதிவாக்கியன்
உற்றமன் காதிர் முகையதீன் னெனவோது
மைந்தன்யான் வாண்க வுறைசெய்வாய்
கற்றனருள் பெற்றதிரு மணியே மௌன
சிகாமணி முகியித் தீனே (39)

முற்றிற்று.

சீர்வளர் சாதக கருணையான் மௌன
சிகாமணிப் பதிகம தென்னும்
சேர்தரு நூலை யிகழ்ந்திடா தெவரும்
நிலந்தனி லோதுவோர் கேட்போர்
கானை யிகைக் குணமென வாய்ந்த
கர்த்தாசம் முகைய்யதீ னருளி
பார்தனி னுளும் மேவியே யின்ப
பரகதிக் குய்குவர் தாமே (40)

# மகாமாயன்.

ஓர் இனிய நாவல்

தமிழ் பத்திரிகைகள்; புகழ்ந்து புகழ்ந்து மதிப்புரை
செய்யப்பட்டது.

---

விலை. அணா 12

இ. எஸ். சிவராமலிங்கம்பிள்ளை.
அம்பாசமுத்திரம்.